No.C.19/2024 02.10.2024

# 21ஆவது இளைஞர் ஞாயிறு
# 13.10.2024

**இளைஞர் இயேசுவின் அன்பிற்கினிய இளைஞரே, இறைமக்களே!**

**இளைஞர் இயேசுவின் உடனிருப்பும், கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் வழிகாட்டுதலும், உங்களனைவரோடும் இருப்பதாக.**

தமிழ்நாடு திருஅவை ஆண்டுதோறும் ஆகத்து முதல் ஞாயிறை (04.10.2024) இளைஞர் ஞாயிறாகக் கொண்டாடுகின்றது. நமது மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் இறைமக்கள் பேரவையின் கருத்துக் கேட்புக் கூட்டம் ஆகத்து மாதத்தில் நடைபெற்றதால், இந்த ஆண்டு மட்டும் அக்டோபர் இரண்டாவது ஞாயிறை இளைஞர் ஞாயிறாகக் கொண்டாட அழைக்கின்றேன். “ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ ஓடுவர் களைப்படையார்” (எசா 40:31) எனும் எசாயாவின் ஆற்றலூட்டும் வார்த்தைகளை இவ்வாண்டின் மையப் பொருளாகத் திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கியுள்ளார்.

நாம் வாழும் இன்றைய சூழலில், இளைஞர்கள் அரசியல் அறிவு கொண்டவர்களாக, மானுட உரிமைகளுக்காகப் போராடுபவர்களாக, பிறரன்புப் பணியில் ஈடுபடுகிறவர்களாக, கல்வி உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறவர்களாக, மண்ணின் கலைகளைக் கற்று, பண்பாட்டில் வேரூன்றியவர்களாக, இயற்கையைப் பாதுகாக்கிறவர்களாக, மதுவிற்கும் போதைப்பொருட்களுக்கும் எதிரான நிலைப்பாடு கொண்டவர்களாக, மூத்தோரைப் பராமரிப்பவர்களாக. படைப்பாற்றலோடு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களாக, களைப்படையாமல், இயேசுவின்மீது நம்பிக்கைக் கொண்டு, தொடர்ந்து உறுதியோடு ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

அதே வேளையில், வேலை வாய்ப்பின்மையாலும், வறுமையினாலும், குடி வெறியினாலும், போதைப்பொருட்களினாலும், பாலுணர்வைத் தூண்டும் காட்சிகளாலும், இணையவழி விளையாட்டுகளினாலும். சமூக ஊடகங்களின் பொழுதுபோக்குதளாலும் ஆளுமைக் குன்றி, சாதி வெறியோடு, மதவெறியோடு, அறிவை இழந்தவராய், பாலியல் சுரண்டலுக்குட்படுத்தப்பட்டு, இயற்கையை, சமூகத்தைப் பொறுப்புணர்வோடு காக்கத் தவறி, நம்பிக்கையற்ற வாழ்வில், தன்னலச் சகதியில் வீழ்ந்து, பொதுநல உணர்வின்றி, தடுமாறியும் வருகின்றனர்.

இந்நிலையில் தடுமாறித் துன்புறும் நம் இளைஞரை நமது திருஅவை தாயுள்ளத்தோடு அணுகுகிறது. இயேசுவின் கனவுச் சமூகமான சமூக நீதியையும் சூழலியல் நீதியையும் அடித்தளமாகக் கொண்ட இறையாட்சியின் மீது நம்பிக்கை கொண்டு, தங்களையும் தங்களது சமூகத்தையும் வளப்படுத்த, தடைகளைத் தாண்டி முன்செல்ல இளைஞர்களை அன்போடு அழைக்கிறது. அவர்களைச் சமூக மாற்றத்தின் கூர்மையான கருவிகளாக உருவாக்கத் திருஅவை முயல்கிறது.

நம்பிக்கைத் தெளிவுடன், இறைவனின் அழைப்பைத் தெளிந்து தேர்ந்து, அந்த அழைப்பிற்கு ஆர்வத்தோடு அகம் இணங்கி, நாசரேத்து இளம் பெண் மரியாவை முன்மாதிரியாகக் கொண்டு, இளைஞர்கள் இலட்சியப்பயணத்தில் முன்செல்ல உடனிருப்போம். உதவிடுவோம்.

அன்னை மரியாவின் வழிநடத்துதலும் இறை ஆசியும் உங்கள் அனைவரோடும் இருப்பனவாக.

கிறிஸ்துவின் மனநிலையில்
Sd/-
**+ ஆயர் நசரேன் சூசை**
கோட்டாறு மறைமாவட்டம்.